கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.34/2022** தேதி:**12.08.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (பெத்தபெருமாள், த/பெ.வேலாயுத கிராமிணி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்து என் அப்பா வேலாயுதத்திற்கு பாத்தியமான சொத்து ஆகும். வழக்கு சொத்து அவர் கிரையம் பெற்ற சொத்தா என்றால் அவர் நீதிமன்றத்தில் ஏலத்தில் எடுத்த சொத்து ஆகும். வழக்கு சொத்தை எனது தந்தையார் தமிழக ஆளுநருக்கு 26.11.1971 தேதி அன்று அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்,

2) வழக்கு சொத்தை சாராயக் கடை ஏலம் எடுத்தற்காக பாதுகாப்பிற்காக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பிறகு வழக்கு சொத்தின் சுவாதினம் யாரிடம் இருந்தது என்றால் சுவாதினம் எங்களிடம் இருந்தது. ஆனால் மின்துறைக்கு வாடகைக்கு விட்டு இருந்தோம்.

3) தமிழ் நாட்டில் அதன்பிறகு மதுவிளக்கு அமல் சட்டம் கொண்டுவரப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா அரசிற்கு எழுதிக்கொடுத்த அடமானத்தை அப்போதே ரத்து செய்யக்கோரி எழுதிக்கொடுத்திருக்க வேண்டும் என்றால் சரிதான். என் தகப்பனார் படிக்காதவர் நானும் அப்போது சிறுபிள்ளை எனவே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4) எனது தந்தை தற்போது உயிருடன் இல்லை. எனது அம்மா பெயர் முத்துலட்சுமி

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.12 13:41:08 +0530

அவர்களும் தற்போது உயிருடன் இல்லை. எனது தந்தைக்கு மொத்தம் 2 பிள்ளைகள். நானும் எனது இளைய சகோகதரி கலைச்செல்வியும் மட்டும் தற்போது கலைச்செல்வி உயிருடன் இல்லை.

5) வழக்கு சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் என் தந்தை மூலம் பாத்தியம் எனது தங்கை விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தார். வழக்கு சொத்தினை பொருத்து வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தபின்பு தான் இந்த அடமானம் பற்றி நான் தெரிந்துகொண்டேன்.

6) அதன் பிறகு மாவட்ட ஆட்சியருக்கோ அல்லது ஆளுநருக்கோ அடமானம் பைசல் ஆகிவிட்டது என்றும் அடமானத்தை ரத்து செய்யது தர வேண்டும் என்று மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனுதாக்கல் செய்துள்ளேன். ஆனால் பதில் ஏதும் வரவில்லை.

7) எனது அப்பா அரசிற்கு செலுத்த வேண்டிய பாக்கி அல்லது தீர்வை ஏதும் உள்ளதா என்றால் எனக்கு தெரிந்த அளவில் எதுவும் கிடையாது. தீர்வைத்தொகை ஏதும் நிலுவையில் இருந்தால் அதனை செலுத்த நான் தயாராக உள்ளேனா என்றால் காலவரை ஆகிவிட்டதால் இல்லை.

8) இந்த வழக்கை நான் காலதாமதத்துடன் தாக்கல் செய்துள்ளதால் இது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.08.12 13:41:14 +0530